ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1822/27 - 2013 අගෝස්තු මස 08 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.08.08

*1822/27 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### ஊவா மாகாணத்தின் மாகாண சபை

ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க,
வீட்டு வாடகை (திருத்த) நியதிச் சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபையால் 2013, யூன் மாதம் 27 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு, 2013, யூலை 15 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்காக, ஊவா மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட பூர்வாங்க நியதிச் சட்டத்தை அனைவரினதும் கவனத்திற்காக இத்தால் வெளியிடுகிறேன்.

கே. டி. சிறிசேன,
செயலாளர்,
ஊவா மாகாண மாகாண சபை.

ஊவா மாகாண மாகாண சபை அலுவலகம்,
இராஜ வீதி,
பதுளை,
2013, யூலை 29.

**ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க,
வீட்டு வாடகை (திருத்த) நியதிச் சட்டம்**

2010 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, ஊவா மாகாண வீட்டு வாடகை நியதிச் சட்டத்தின் 5 (2) துணை விதியினை திருத்துவதற்காக இயற்றப்படுகின்ற நியதிச் சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிச் குடியரசின் ஊவா மாகாணத்தினது மாகாண சபையினால் இவ்வாறு விதிக்கப்படுகின்றது.

1. இந் நியதிச் சட்டமானது ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, வீட்டு வாடகை (திருத்த) நியதிச் சட்டம் என அழைக்கப்படும். அது ஊவா மாகாண ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்படும் தினத்திலிருந்து அல்லது தீர்மானிக்கப்படும் நாள் முதல் அமுலில் இருத்தல் வேண்டும். சுருக்கப் பெயர் மற்றும் நடைமுறைக்கு வரும் திகதி.

2. (1) இதன் பின்னர் "பிரதான நியதிச் சட்டம்" என அழைக்கப்படும் 2010 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க ஊவா மாகாணத்தினது வீட்டு வாடகை நியதிச் சட்டத்தின் 5 ஆவது விதியின் (2) ஆவது துணை விதி கீழ்க்காணுமாறு திருத்தப்படுகின்றது. பிரதான நியதிச் சட்டத்தின் 5 (2) ஆம் துணை விதி திருத்தப்படுதல்.

"குறித்த சட்டங்களில் அமைச்சர் அவர்களினால் இயற்றப்பட்டு தற்போது அமுலில் உள்ள கட்டளைகள் மாகாண அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளைகளாகக் கருதப்பட வேண்டியதுடன் குறித்த சட்டங்கள் ஊவா மாகாணத்தினுள் அமுல்படுத்தப்படுகின்ற போது சட்டத்தின் கீழ் மாகாண அமைச்சரினால் விதிக்கப்பட்டுள்ள அல்லது இனிமேல் விதிக்கப்படும் கட்டளைகளுக்கிணங்க அமுல்படுத்தப்படுவது சட்டரீதியாதல் வேண்டும். அவ்வாறே தற்போது அமுலில் உள்ள கட்டளைகளை ரத்துச் செய்வதற்கு, மாற்றம் செய்வதற்கு, திருத்தம் செய்வதற்கு அல்லது புதிய கட்டளைகளை ஆக்குவதற்கு மாகாண அமைச்சருக்கு இயலுமாதல் வேண்டும்".

ஒவ்வாமை தோன்றின் சிங்கள மொழி வலுப் பெறும்.

3. இந்நியதிச் சட்டத்தின் சிங்கள மற்றும் தமிழ் அல்லது ஆங்கில மொழி சொற் பிரயோகங்களில் ஏதாயினும் ஒவ்வாமை காணப்படின் அவ்வேளையில் சிங்கள மொழிப் பிரயோகம் வலுவானதாதல் வேண்டும்.

*8-779*